# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.42/2019 நாள். 31.05.2019

## தனி அலுவலர் அவர்களின் மே 2019 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

31.05.2019ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஏப்ரல் மற்றும் மே 2019 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஏப்ரல் 2019 | 1 | 0 | 7 | 5 | இல்லை | இல்லை |
| 2. | மே 2019 | 0 | 0 | 12 | 12 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஏப்ரல் மற்றும் மே 2019 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில், கொசு ஒழிப்பு மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டன. தற்போது பொது சுகாதாரப் பிரிவில், கொசு ஒழிப்பு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை தீவிரப்படுத்த பைரித்திரம் 2% என்ற புகைமருந்து 250 லிட்டரும், டெமிபாஸ் 50% 200 லிட்டர் பொது மேலாளர், தமிழ்நாடு மெடிக்கல் சர்வீசஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.4.80 இலட்சம் ஆகும்.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 4</u>

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு புதிதாக வாங்கப்பட்ட 9 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களுக்கு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து வாங்க ஏதுவாக பச்சை மற்றும் நீல நிற 80 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் 50 எண்ணம் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களின் Activity புத்தகம் வாங்கி வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 5</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் பொது நிதியில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பசுமை உரக்குடிலுக்கு Hydraulic Rag Bailing Machine வாங்குதல் பணி | 6.00 |
| 2 | பசுமை உரக்குடிலில் மக்கும் குப்பைகளை தூளாக்கும் இயந்திரம் வாங்கும் பணி (Bio – Pulveriser Machine) | 2.00 |
| 3 | பசுமை உரக்குடிலில் மக்கும் குப்பைகளை தூளாக்கும் இயந்திரத்தில் புதிய பிளேடுகளை பொருத்தி பழுது நீக்கம் செய்தல் பணி | 0.85 |

<u>அலுவலகக்குறிப்பு</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.6</u>

இந்நகராட்சி 2018-2019ம் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யும் பணி 29.5.20189 உள்ளாட்சி நிதித்திதணிக்கை துறையால் துவங்கப்பட்டதின்பேரில் தணிக்கை ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவு கணக்கு தயாரித்தல் 31.03.2019 நிலையில் ஐந்தொகை குறிப்புகள் தயாரித்தல், நகராட்சியின் நிரந்தர சொத்துகளுக்கு மதிப்பீடு செய்தல், நகராட்சி கணக்கு நடைமுறை நூலில் விவரிக்கப்பட்ட துவக்க ஐந்தொகை குறிப்பு தயாரிக்க அனைத்து அட்டவணைகள் தயாரித்தல், பொதுபேரேடு தயாரித்தல் ஆகிய பணிகள் தனியார் கலந்தாய்வர் மூலம் விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொள்ளவு. அதற்கான தோராய செலவினம் ரூ.90000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண். 7</u>

இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊதியத்தில் 2018–19ம் ஆண்டு பிடித்தம் செய்த வருங்கால சேமநல வைப்பு நிதி தொகைக்கு வட்டி விகிதம் கணக்கீடு செய்து இயக்குநர் உள்ளாட்சி நிதித் துறை அலுவலகத்திற்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டியுள்ளதால், தனியார் கலந்தாய்வர்

மூலம் கலந்தாய்வர் மூலம் விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.80000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :_** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 8</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பிஎஸ்என்எல் நிறுவனத்தின் மூலம் VPN சர்வீஸ் வழங்கியதற்கானகட்டணத் தொகை 1.7.2018 முதல் 31.3.2019 வரைக்கான ரூ.110511/- மற்றும் ஜி.எஸ்.டி. தொகை ரூ.19892/- சேர்த்து மொத்த தொகை ரூ.130403/-ஐ (Accounts Officwer (cash) O/oCGM BSNL Tn Circle chennai 600 002 என்ற பெயரில் வாங்கி வரைலவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி பேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :_** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

தனி அலுவலர்,
அனகாபுத்தூர் நகராட்சி.